இவ்வளவு வந்து விட்டது! சரி, இனிப் போகலாம், வா! என்று திரும்பும் போது,

மாயவர், கணக்கில்லாத வேடு படைகளை சிருஷ்டித்து விட்டார்.

பாட்டு

"கிழக்கிருந்து வருகுதடா இனி வருகுதடா
அங்கு கணக்கில்லா வேடுபடை இனி வேடுபடை"

---

சி. சாமி. அடே, சாம்புகா! இது, என்னடா, மறுபடியும் கிழக்கிலிருந்து, இவ்வளவு படை வருகிறது! என்று, இருவரும் கத்தியை யெடுத்து - ) 273

274 பாட்டு

"வெட்டி வெட்டி குவிக்குறாரே
அங்கு குவிக்குறாரே.
கணக்கில்லாத வேடுபடை
அங்கு வேடு படை
அறுத்தறுத்துக் குவிக்குறாரே
அங்கு குவிக்குறாரே.
அத்தனை படை களைத்தான்
அங்கு படை களைத்தான்"

---

இருவரும் எல்லாப்படைகளையும் அறுத்துக் குவித்து விட்டு, 'சாம்புகா! இனிப் போகலாம், வா! என்று திரும்பும் போது, மாயவர், மறுபடியும் அளவில்லாத வேடுபடைகளை வளர்த்து விட்டார்.

பாட்டு,,

"மேற்கிருந்து வருகுதடா இனி வருகுதடா.
கணக்கில்லா வேடுபடை அங்கு வேடுபடை"

---

சி.சாமி 'அடே, சாம்புகா! இது வென்னடா காரண மாக யிருக்கிறது? படைகள், வெட்ட, வெட்ட குறைந்து கொண்டே, இருக்கிறது!' என்று, இருவரும், கத்தியை எடுத்து-

பாட்டு,,

"வெட்டி வெட்டிக் குவிக்கிறாரே
அங்கு குவிக்கிறாரோ.
கணக்கில்லா வேடுபடை
அங்கு வேடுபடை
வேருப்போன பக்கமெல்லாம்
அங்கு பக்கமெல்லாம்.
வெந்தண்ணி ஊத்துறாரோ
அங்கு ஊத்துறாரோ."

---

இருவரும், அத்தனை படைகளையும் அறுத்து குவித்து விட்டு, இனிப்போகலாமென்று திரும்பும் போது, மாயவர், மறுபடியும் ஏராளமான படைகளை, இருவருக்கும் அனுப்பி வைத்து விட்டார்.

பாட்டு,, "வடக்கிருந்து வருகுதடா இனி வருகுதடா
வண்ணலகுவம் வேடுபடை அங்கு வேடுபடை"

---

அதைப்பார்த்த சின்னண்ண சாமி, சாம்புகனி
டம் 'சாம்புகா! வேடுபடை, வெட்ட வெட்ட
த் துழைகிறது! வடக்கிருந்து, ஏராளமான
படைகள் வருவதைப்பார்! இனி நம்மால்
சண்டை செய்ய முடியாது, வாடா! போய்
விடலா'மென்று, இருவரும் புறப்பட்டு
ஓடும்போது, மாயவர் மூன்று நாமத்து
டன், வேடுபடைகளைக் கூட்டிக் கொண்டு
இருவரையும் பின்னால் துரத்திக் கொண்டு
வந்தார்.

படைகள் பின்னால் துரத்திக்கொண்டு வருவதை
சாம்புகன், திரும்பி பார்த்து விட்டு, 'ராஜாவே! படைகள்,
விடாமல் நம்மைத் துரத்திக் கொண்டு வரு
கிறது, என்ன செய்வது, சாமி? என்றதும்,
சின்னண்ண சாமி நின்று, பின்னால் திரும்பி
பார்த்தார். )274

275 (அப்போது மாயவர், நெற்றியில் மூன்று நாம
த்துடன், படைகளைக் கூட்டிக் கொண்டு
வருவதைப்பார்த்து விட்டு, 'அடே, சாம்புகா!
அதோ, பார்! படைகளின் முன், மூன்று நமத்
துடன் வருகிறானே, அவன் தான்,

படைகளை, வெட்ட, வெட்ட வளர்ந்து விடுகிறான்! அவன், வேலைதான்டா இவ்வளவும், முதலில் தேடிப்போய், அவனை நேரே வெட்டவேண்டும் வெட்டுவோம், பிறகு படைகளை வெட்டுவோம் என்றார்.

சின்னண்ணசாமி, சாம்புகனிடம் சொன்னதை மாயவர் காதில் கேட்டு, ஓடி வந்து சாமியின் கையைப் பிடித்து 'வேண்டாம், சாமி! என்ன, ஒன்றும் செய்ய வேண்டாம்! படைகள் இவ்வளவுதான், இனி இதற்கு மேல் வராது, நிலாவை விட்டு கீழே இறங்கி, இருவரும் படைகளை வெட்டி எறியுங்கள்' என்று, சொல்லி விட்டு, மாயவர் சென்று விட்டார்.

உடனே, சாமியும் சாம்புகனும் கத்தியை எடுத்து-

பாட்டு

"மூன்றுக என் சாமி பின்றுக
புலிப்பாய்ச்சல் என் சாமி பாயுறாரே
வெட்டி வெட்டிக் குவிக்குறாரே
அங்கு குவிக்குறாரே.
வீரமலைக் கணவாயிலே
அங்கு கணவாயிலே"

இருவரும் படைகளை ஒன்று கூட விடா
மல் வெட்டியெறிந்து விட்டு, 'சாம்புகா!
இவ்வளவும், மாயவர் செய்த சூழ்ச்
சி, சரி, வா! கத்தியில் இருக்கும் ரத்தம்,
கத்தியை தூக்க முடியவில்லை, வாணியாறு
சென்று, கத்தியை கழுவிக் கொண்டு, பிறகு,
அண்ணரிடம் சென்று, கூறுகளை யெடுத்
துக் கொண்டு ஊருக்குப் புறப்படலாம்'
என்று, இருவரும் வாணியாற்றுக்குப் புறப்பட்டு
போகும் போது.

அப்போது மாயவர், 'இவர்களுக்கு,
வயது பதினாறு, வாலிபம் தொண்ணூறு
சரியாக முடிந்து விட்டது! இனி, இவர்
கள் உயிரைப் பிடித்து, தெய்வ சபை
க்கு அனுப்ப வேண்டு மென்று நினைத்து,
வாணியாற்றின் அருகே, வன்னி மரத்தில்
பள்ளி கொண்டிருந்தார். அப்போது,
சாமியும் சாம்புகனும் வன்னி மரத்
தின் அருகில் வரும் போது, மரம்
சலசலவென்று ஆடியது; அது கண்ட
சின்னண்ண சாமி, 'சாம்புகா! காற்றும்
அடிக்கவில்லையே! இந்த வன்னி மரம்

ஏன், இப்படி, ஆட வேண்டிய காரணம் என்னவோ? தெரியவில்லை! யென்று, சாமி மனதில் சிறிது சந்தேகங் கொண்டு, இருவரும் ஆற்றில் இறங்கி, மார்க்கட்டுத் தண்ணீரில் நின்று, கத்தியை கழுவினார்கள்.

பாட்டு

"வாணியாறு போயிறங்கே
சாமி கத்தி கழுவையிலே
மார்க்கட்டுத் தண்ணியிலே
சாமி கத்தி நல்லோ கழுவையிலே) 275
276 (மாயன் பெருமாளும் இனி
மகமேருங் கோபாலர்
வாழைத் தண்டை வில் வளைத்தார் அங்கே
மல்லிகைப்பூ கணை தொடுத்தார்.
சோளத் தண்டை வில் வளைத்து அங்கே
சருளிப்பூக் கணை தொடுத்தார்
பொல்லாத மாயவர் அங்கே
போட்டாரே அம்பினிலே
அம்புச் சிறுக்கு வந்து சாமியின்
வெண்ணூலே அறுத்துதடா."

---

சி. சாமி: அடே, சாம்புகா! ஏதோ, அம்பு வந்து, என் வெண்ணூலே அத்துக் கொண்டு, போகுதடா! என்று-

பாட்டு,,

"முன் காரணம் என் சாமி பின் காரணம்
முப்பத்திரண்டு நல்லோ சேல்க் காரணம்."

சின்னண்ண சாமி மின்னல் வேகத்தில் மேலே பாய்ந்து போய், அம்பை கையில் பிடித்து பார்க்கும் போது, அம்பு வாயில் வெண் நூல் சிக்கியிருந்தது. அதை பார்த்து சின்ன சாமி,

~~சி.~~ அடே, சாம்புகா!

பாட்டு,,

"அந்தப் பொல்லாத மாயவர், என்ன
போட்டாரே அம்பிலே
அம்புச் சிறைக்கு வந்து. என்
வெண்நூலை அத்துதடா
வெண்நூலு அந்து தடா. இனி
நம்ம நூல் அந்து தடா."

அடே, சாம்புகா! வெண்நூல் அந்த பிறகு, இனி நாம், ஒரு நிமிடம் உயிரை வைத்திருக்க முடியாது.

சாம்புகன். ராஜா வே! ஒரு நூல் அந்தால், நாம் உயிரை விடுவதா? ராஜாவே, வேண்டாமிங்கோ!

சி.சாமி. அடே, சாம்புகா!

ஓடிவா! வன்னி மரம் மட்டப்பறைக்குப் போகலாமென்று, சாமி புறப்பட்டு வன்னி மரம், மட்டப்பறை போய் நின்றார்.

பின்னால் ஓடி வந்த சாம்புகன், சாமியை பார்க்கும் போது, சின்னண்ணை சாமியின் தேகம் ஆனாலும் அப்படியே நடுங்கி யது.) 276

277 சாம்புகன். 'ஐய்யோ, ராஜாவே! ஏன், இப்படி நடுங் குகிறீர்கள்?'.

சி.சாமி. 'சாம்புகா! ஒன்றுமில்லை, நீ சீக்கிரம் சென்று, பொன்னருக்கை கிளிக்கு காவல் வைத்து விட்டு, அண்ணரை யிங்கு கூட்டிக் கொண்டு, வா! என்றார்.

சாம்புகன். 'சரி, நல்லது ராஜாவே! என்று புறப்பட்டுச் சென்று, பெரியண்ணை சாமியைப் பார்த்து, 'ராஜாவே! சின்ன ராஜா, தங்களை சீக்கிரம் கூட்டிக் கொண்டு வரச் சொன்னார், சின்ன, ராஜா! ஏனோ, நடுங்கிக் கொண்டு இருக்கிறார்! என்றான்.

பெ.சாமி. 'சாம்புகா! சின்னண்ணை சாமி, இப்போது எங்கு இருக்கிறார்?'

சாம்பு. 'வாணியாற்றின் அருகில், வண்ணிமரம் மட்டப் பாறையில், இருக்கிறார், ராஜாவே!'

வெ.சாமி! சரி, நல்லது! என்று, பொன்னுச்சியை கழுக்கு காவல் வைத்து விட்டு, புறப்பட்டு வண்ணி மரம் மட்டப்பாறைக்கு வேகமாக ஓடி வந்து, சின்னண்ணசாமியை கட்டிப்பிடித்து, 'பொன்னையா! ஏன், இப்படி நடுங்குகிறாய்? என்ன, நடந்தது? என்றார்.

சி.சாமி. 'அண்ணு! நான்,

பாட்டு

"வாணியாறு போயி மங்கே
நான் கத்தி கழுவையிலே
மார்க்கட்டுத் தண்ணியிலே
நான் கத்தி கழுவையிலே
பொல்லாத மாயவர் என்னை
போட்டாரே அம்பினாலே
அம்புச் சிறுக்கு வந்து
என் வெண்ணூலு அந்து தண்ணு.
வெண்ணூலு அந்து போல். இனி
நம்ம நூல் அந்து தண்ணு."

---

அண்ணு! வெண்ணூல், அந்து விட்டது; இனி, நாம் உயிரை வைத்திருக்க லாகாது!

பெ. சாமி. 'வாண்டாமடா, பொன்னையா! பதராதே, கோபத்தை அடக்கு, ஒரு நாள் அந்த தூக்கு, நாம் உயிரை விடுவதா? கூடாது, சாமி! யென்று, மார்புடன் அணைத்து, ஆறுதல் சொன்னார்.

சி. சாமி.! அண்ணா! நீங்கள், என்ன சொன்னாலும், கேட்க மாட்டேன்.
விண்ணப்பட்ட மேனி, விண்ணப்பட்டுப் போச்சு,
குத்துப்பட்ட மேனி, குத்துப்பட்டுப் போச்சு. அண்ணா! நம்மளுக்கு, வயது பதினாறு, வாலிபம் தொண்ணூறு, சரியாக முடிந்து விட்டது; நம்மகாலம் முடிந்து விட்டது; நாம் இனி உயிருடன் இருக்க, நியாயமில்லை!'

அன்றெழுதும் கர்த்தனவன், அழித்தெழுதப் போவதில்லை; நான், இனி உயிரை வைத்திருக்க மாட்டேன்! உயிரைவிட உங்களுக்கு பயமாக இருந்தால், அரண்மனைக்குச் சென்று, பர்வதியாளை மாத்துக் கொள்ளுங்கள், நான் இங்கு

631,

உயிரை விடுவது, நிச்சயமென்று, இன்ன
ண்ணசாமி, நேரே அழுவாக சொல்லும்
போது.

பெ.சாமி! 'அப்பா, பொன்னையா!

பாட்டு))

"சேர நல்லோ சேரப்பிறந்தவள
அங்கு பிறந்தவள

செல்வத்தை தனியே விட்டு
அங்கு தனியே விட்டு

ஒக்க நல்லோ ஒக்கப் பிறந்தவள
அய்யோ பிறந்தவள) 2 11

2 11 ( ஒருவிளைய ஒருவிளையைத் தனியே விட்டு
அய்யோ தனியே விட்டு"

—·—·—·—·—·—·—·—·—

இன்னையா! நாம் கூடப் பிறந்தவள, கொஞ்சவள
தனியே விட்டு, விட்டுப் போவதா?'

சி.சாமி.' அண்ணா! தெய்வ சபையில், ஆறு பேர் கன்னி
களுக்கு இளைய கன்னி, பார்வதியா! அவள் நம்
மைப்போல, மானிடப் பிறவியல்ல! இந்த
பூலோகத்தில், அவள் நம்மளுக்கு தங்கை
யாக பிறந்தது, நம்மளுக்கு பின்னால் வரும்
ஆபத்தை, முன்னால் சொல்வதற்க்காகவே

அவள் நம்முடன் பிறந்தாள்! அவளுக்காக நாம் கவலைப்பட வேண்டியதில்லை, நாம் இறந்த பிறகு, நம்மளுக்கு செய்ய வேண்டிய சடங்குகளை செய்து விட்டு, அவள் தெய்வசுவைக்கு சென்று விடுவாள்! அப்படி, உங்களுக்கு கவலையாக இருந்தால், நீங்கள் அரண்மனைக்குச் செல்லுங்கள், நான், இனி ஒரு நிமிடம் என் உயிரை வைத்திருக்க மாட்டேன் என்று, கத்தியை எடுத்து மட்டப்பாறையின் மேல், தெய்வசுவையை நினைத்து, மாயவரை நினைத்து, சின்னண்ண சாமி, (உயானை பலனையும் கூட்டி, கத்தியை பாறையில் ஊன்றும் போது, கத்தி ஒரு முளம் பாறையின் உள்ளே சென்று, அப்படியே நின்றது. பிறகு, சின்னண்ண சாமி, கிழக்கு, சிறிது தூரம் சென்று, மேற்கு முகமாக நின்று, மாயவரை நினைத்து, வேகமாக ஓடி வந்து கத்தி முனையில் மார்பை வைத்து அழுத்தும் போது, கத்தி சாமியின் மார்பை பொத்துக் கொண்டு, ஒரு முளம் மேலே நின்றது. சின்னசாமிக்கு, காலாடி, கையாடி கொண்டிருந்து போய் விட்டது.

மாயவர் வன்னிமரத்திலிருந்து, சின்னண்ண சாமி
யின் உயிரை பிடித்துக் கொண்டார்.
சின்னண்ண சாமி, இப்படி இறந்ததும், பெரியண்
ணசாமியும் 'ஆகா! பராக்கிரம சாலியாகிய,
நம், தம்பி இறந்த பிறகு, நாம் எதற்கு உயிரை
வைத்திருப்பது? யென்று, கிழக்கே ஓடி, மேற்கு
முகமாக நின்று, மாயவரை நினைத்து, ஓடி
வந்து கத்தியின் மேல் விழுந்தார். அவரு
டைய மார்பையும், கத்தி துளைத்து, மேலே
ஒரு சாண் நின்றது. பெரியண்ண சாமிக்கு,
காலாட, கையாட, கண்முழி போய் விட
டது. மாயவர், பெரியண்ண சாமியின் உயி
ரையும் பிடித்துக் கொண்டார்.
சாமியிருவரும், புளியங்காய் போல், கத்தியில் தொங்
குவதைக் கண்ட சாம்புகன் 'ராஜா! இருவரும்
இறந்து விட்டார்கள்! இனி, நாம் எதற்கு?
இருக்க வேண்டு மென்று, சாம்புகன் வன்னி
மரத்தின் பெரிய வாது ஒன்றை ஒடித்து வந்து,
பாறையில் வடக்கு முகமாக நின்று, மாயவரை
நினைத்து, வன்னிமரத்தின் வாதை, பாறையில்
ஊன்றும் போது, வாது, பாறையில் ஒரு
முழம் கீழே சென்று, அப்படியே நின்றது.

சாம்புகன், கிழக்கில் ஓடி, மேற்கு திரும்பி நின்று, மாயவனை நினைத்து, ஓடிவந்து மார்பை வன்னி மரத்தின் வாளில் ஊன்றும் போது, வாளு, சாம்புகனின் மார்பைத் துளைத்து, காலாடி, கையாடி, சாம்புகனுக்கு உயிர் போய் விட்டது. மாயவர் மூன்று பேர் உயிரையும் பிடித்து, தங்கச் சிமிழில் அடைத்துக் கொண்டு, தெய்வ சபை சென்றார்.

மாயவர் வருவதை ஈஸ்வரன் பார்த்து, எதிர் கொண்டு அழைத்து வந்து ஆசனத்தில் அமரச் செய்தார். ) 278

279 ஈஸ்வரன்: மைத்துனரே! பொன்னிவள நாட்டு, தாமரையாக்கவுண்டச்சியின், இரண்டு ஆண் குழந்தைக்கும், பதினாறு வயதுக்கு வரம் வாங்கிக் கொடுத்தீரே? இப்போது, அவர்களுக்கு, வயது பதினாறு சரியாக ஒழிந்து விட்டது! அவர்கள் உயிரை கொண்டு வந்தீரோ?

மாயவன்: மைத்துனரே! இதோ, கொண்டு வந்து விட்டேன்! அவர்கள் உயிரை பெற்றுக் கொண்டு, என்னுடைய, வலம்புரி சங்கும்,

கோபாலப் பெட்டியையும், கொடுங்கள்என்றார். ஈஸ்வரன், உடனே உயிரை வாங்கிக் கொண்டு, வலம்புரிச் சங்கையும், கோபாலப் பெட்டியையும் மாயவருக்கு கொடுத்தார். மாயவர் அதை வாங்கிக் கொண்டு, ஈஸ்பரனிடம் விடை பெற்று, பாற் கடல் போய், பள்ளி கொண்டார்.

தெய்வ சபையில் இப்படி நடந்து கொண்டிருக்கும் போது,

(பொன்னிவள நாட்டில்)

அண்ணருடன் பிறந்த அருக்காணி நல்ல தங்கு, பொன்னருடன் பிறந்த பேடை மயில் நல்லதங்கு, இருவினிச் சாரியில் ஆடிக் கொண்டிருந்தாள்.

பாட்டு

"ஆடுது அன்னவூஞ்சல் பத்தினிக்கு
அசையுதுபார் பெண்பதுமை பர்வதிக்கு
ஓடுது வெள்ளிரதம் பத்தினிக்கு
ஒவையுது பெண்பதுமை பர்வதிக்கு
பாடுது அன்னவூஞ்சல் கண்மணிக்கு

636,

முன்பக்க பாட்டு,,

பறந்து வரும் பொன் நூச்சம் பர்வதிக்கு
அண்ணனுடைய நீசன் தொட்டிலிலே பத்தினியா
அயர்ந்து நித்திரை செய்யுறாளே பர்வதியா"

---

பர்வதியா, திருவினித்தாளியில் நித்திரை செய்து
கொண்டிருக்கும் போது,

~~பாட்டு~~,,

வசனம்.

நாரு வரும் போது, பத்தினியா
நல்ல கனு கண்டு சொன்னாள்.
ஊரு வரும் போது அண்ணக் கொடி
உற்ற கனு கண்டு சொன்னாள். பர்வதியா,
இப் போது, அண்ணருக்கு
கேடு வரும் போது கெட்ட கனு கண்டு
விட்டாள்.

ஆகாத சொப்பனங்கள், இப்போது
அருங்கிளியா கண்டு விட்டாள்.
பொல்லாத சொப்பனங்கள், பொற்க்
கொடியா கண்டாளே.

பாட்டு,,

"பால்க் காச்சும் பால்க் காச்சும் மண்டபங்கள்
அங்கு மண்டபங்கள்.
பாசம் நல்லோ பாசம் படைக்க கண்டாள்
அங்கு படைக்க கண்டாள்
நெய் காச்சும் நெய் காச்சும் மண்டபங்கள்
அங்கு மண்டபங்கள்.

637,

முன்பக்க பாட்டு

279

நிலாநல்லோ நிலம் படரக் கண்டாள்
அங்கு படரக் கண்டாள்.

ஆனைகட்டும் ஆனைகட்டும் கொட்டாரம்
அங்கு கொட்டாரம்.

அருகு நல்லோ அருகு முளைக்கக் கண்டாள்
அங்கு முளைக்கக் கண்டாள்.

குதிரை கட்டும் குதிரை கட்டும் கொட்டாரம்
அங்கு கொட்டாரம்

குப்பை வந்து குப்பை வந்து
" அணையக் கண்டாள் அங்கு அணையக் கண்டாள்

---

வசனம்

ஆகாத சொப்பனம், அருங்கிளியாள், கண்டாளே!
பொல்லாத சொப்பனம், பொற்கொடியாள், கண்டாளே!

இப்படி கெட்ட கனவு கண்டு, பர்வதியாள் பயந்து, திருவின் தூரியலிருந்து திடீர் எழுந்து, 'அடி, மாதர்களே! இங்கு ஓடி வாருங்கள்!' என்றாள்.

பர்வதியாள், சத்தம் கேட்டு மாதர்கள் ஓடிவந்து பர்வதியாளைக் கண்டு 'ஏன், தாயே! அழைத்தீர்கள்?' என்றார்கள்.

பார்வதி: அய்ய,மாதர்களே! நான் ஆகாத சொப்பனம் அருங்கிளியா கண்டேனடி! எந்தக் காலத்திலும் காணாத கனவு, இன்று கண்டேன்! சரி,வாருங்கள்! அண்ணர்கள், வீரமலைக்கு போகும் போது, ஐந்து அடையாளம் வைத்து விட்டுப் போனார்கள், போய் பார்ப்போமென்று, அடையாளங்களை போய் பார்க்கும் போது.

பாட்டு

"மாங்காய் அழுகலாச்சு. அங்கு
மல்லிகைப்பூ வாடலாச்சு
தேங்காய் அழுகியாச்சு. இனி
திருவிளக்கு அணையலாச்சு.
செம்புத் ஜலம் குறைந்து போச்சு
சேர்ந்த சந்தனம் காயலாச்சு"

அதைக் கண்டு, பார்வதியாள்.

பாட்டு

"அண்ணர்கள் செத்து மடிந்தாரென்று
தெரிந்து கொண்டாள் பத்தினியும்
மாண்டு மடிந்தாரென்று
மங்கையவள் தெரிந்து கொண்டாள்!"

பார்வதி: அய்ய,மாதர்களே! இனி,நான் என்ன செய்வேன்?

639.

பார்வதி: பாட்டு,,

"வீரமல. வீரமலக் காட்டிலேதான்
அங்கே காட்டிலேதான்

வெண்ணுடியும் வெண்ணுடியும் சோலையிலேதான்
அங்கு சோலையிலேதான்

அண்ணருகள் செத்து நல்லோ செத்துமடிந்தார்
அங்கு மடிந்தார்கள்.

சிவன் பாதம் சிவன் பாதம் சேர்ந்தார்கள்
அங்கு சேர்ந்தார்கள்.

மாண்டு நில்லோ மாண்டு மடிந்தார்கள்
அங்கு மடிந்தார்கள்

வைகுந்தம் அண்ணர்கள் சேர்ந்தார்கள்
அங்கு சேர்ந்தார்கள்" ) 280

281 அடி, மாதர்களே! வீரமலக் காட்டில், வெண்ணுடியும் சோலையில், என்னுடைய அண்ணமார்கள் செத்து மடிந்து விட்டார்கள், சிவன் பாதம் சேர்ந்து விட்டார்கள். அடி, மாதர்களே! சீக்கிரம் சென்று, என்னுடைய நங்கை மதனிகளை, நாத்துணைப் பெண்களை, அண்ணருக்கு வந்ததொரு ஆசைப் பசுங்கிளியை, பொன்னருக்கு வந்ததொரு பேடை மயில் பத்தினியை

சீக்கிரம், கூட்டி வாருங்கள்' என்றாள்.

மாதுர்கள், உடனே செல்வநிக்கா மாளிகைக்குச் சென்று, பார்வதியாள் கூப்பிடுவதாக, அண்ணிமார்களை கூப்பிட்டார்கள்.

அதைக்கேட்டதும், சின்னண்ணை சாமியின் மனைவியானவள், பெரியண்ணை சாமியின் மனைவியை நோக்கி. 'அக்கா! இவ்வளவு நாளாக, ஒருவரும் நம்மை அழைக்கவில்லை, இன்று எதற்கு அழைக்கிறார்களோ, தெரியவில்லை! சரி, எதற்கும் போய் விட்டு வருவோ'மென்று, இருவரும் புறப்பட்டு, பார்வதியாளிடம் வந்து அம்மணி! எங்களை எதற்கு, அழைத்தாய்? என்று, கேட்டார்கள்.

பார்வதி. பாட்டு,,

"அண்ணியரே அண்ணியரே. இனி
அண்ணருட தேவியரே அங்கு தேவியரே
அண்ணருக்கு வந்து தொரு இனி வந்து தொரு
ஆசைப்பசுங் கிளியே அங்கு பசுங்கிளியே"

அண்ணியர்களே! என், அண்ணன் மார்களுக்கு, வேட்டைக்குப் போன பக்கம் வினை வந்து நேர்ந்தும்மா!